# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 165/2024 நாள்.06.11.25**

PW1- திரு.ரவிசந்திரன் த/பெ. திரு. திருமேனி

1ஆம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை

என் தகப்பனார் திருமேனிக்கு சொந்த ஊர் என்ன ஊர் என்றால் கண்ணந்தங்குடி. என் தகப்பனார் என்ன வேலையில் இருந்தார் என்றால் காவல்துறையில் காவலராக இருந்தார். என் தகப்பனார் எந்த ஆண்டு காவல்துறையில் பணியில் சேர்ந்தார் என்றால் தெரியாது. அவர் எங்கு குடியிருந்தார் என்றால் தளவாய்பாளையம் சாலையில் காளிங்கராயர் தெருவில் தற்போது நான் வசித்து வரும் வீட்டில் வசித்தார். சொந்தஊரில் என் தகப்பனாருக்கு பூர்விக சொத்து உள்ளதா என்றால் இல்லை. வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு பாகம் கேட்டுள்ளேன். எத்தனை அயிட்ட சொத்தை பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் 5மனைபிரிவுகளை பிரித்து கொடுக்க கேட்டுள்ளேன். 1ஆம் பிரதிவாதி என் சகோதரர் என்றால் ஆமாம். 2, 3 பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி என் அம்மா என்றால் ஆமாம். தாவா சொத்து மனைகள் எந்த தேதியில் யாரால் கிரையம் வாங்கபட்டது என்றால் என் பாட்டி தனபாக்கியதம்மாள் பெயரில் 1977இல் வாங்கினார். அன்றையதேதியில் என் பாட்டிக்கு என்ன வருமானம் என்றால் மாடு வைத்து பால் வியாபாரம் செய்தார் அது தவிர சொந்தஇடம் இருந்தது அதில் விவசாயம் செய்தார். மேற்படி விசயத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. என் அப்பா சிறு பிள்ளையாக இருக்கும்போதே இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். தாத்தா இறந்தபோது பாட்டி எங்கு குடியிருந்தார் என்றால் தற்போது நான் வசித்து வரும் வீட்டில் குடியிருந்தார். என் பாட்டிக்கு எத்தனை வாரிசு என்றால் என் அப்பாமட்டும்தான். என் தாத்தா சிறுவயதில் இறந்துவிட்டதால் எனது பாட்டிதான் என் அப்பாவை படிக்கவைத்தார் என்றால் ஆமாம். என் அப்பாவுக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் நான் 1970வயதில் பிறந்தேன் அதற்கு முன்பாக நடந்தது. நான் பிறப்பதற்கு முன்பாக என் தகப்பனார் வேலைக்கு போய்விட்டார் என்றால் ஆமாம்.

காவல்துறையில் பணிபுரிந்ததால் வந்த வருமானம் அனைத்தையும் தானும் தனது தாயாரும் அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் ஆமாம். எனது அப்பா அவருடைய காவல்துறையில் பணியாற்றிய வருமானத்தை வைத்து அவருடைய தாயார் பெயரில் 1977இல் தாவா சொத்துக்களை வாங்கினார் என்றால் இல்லை. என் பாட்டிதான் கிரையம் வாங்கினார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பாட்டி பெயரில் உள்ள கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. குடியிருக்கும் வீட்டிற்கு அருகே என் அப்பா எத்தனை ஏக்கர் கிரையம் வாங்கினார் என்றால் பாட்டிதான் 2ஏக்கர் கிரையம் வாங்கினார். என் தகப்பனார் எந்த தேதியில் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 19பிளாட் ஒருதேதியிலும் அதிலிருந்து பத்துநாள் கழித்து 2பிளாட் செட்டில்மெண்ட்டாக எழுதி தந்தார். ஒவ்வொரு பிளாட்டும் எவ்வளவு சதுரடி இருக்கும் என்றால் 2000 சதுரடியும் அதற்கும் மேலும் இருந்தது, அதிகபட்சமாக 3250 சதுரடி இருந்தது. எனக்கு எழுதி கொடுத்த மொத்த பிளாட்டும் எவ்வளவு சதுரடி என்றால் 69200சதுரடி. 1ஆம் பிரதிவாதிக்கு எத்தனை பிளாட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் 27 பிளாட். அவருக்கு எத்தனை சதுரடி என்றால் என் அளவைவிட 2000அதிகமாக இருக்கும். 2, 3 பிரதிவாதிகளுக்கு எத்தனை பிளாட் எழுதி கொடுத்தார் மற்றும் எத்தனை சதுரடி என்றால் ஆளுக்கு ஐந்து பிளாட் மற்றும் ஒவ்வொருக்கும் 12000 சதுரடி இருக்கும். என் அப்பா திருமேனி நகர் என்று பெயரிட்டு அனுமதி பெற்று பிளாட் விற்றார் என்றால் ஆமாம். எங்கள் இரண்டுபேருக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது மற்றும் இரண்டு சகோதரிக்கு எழுதி வைத்தது போக மீதி எத்தனை பிளாட் என் அப்பா வைத்திருந்தார் என்றால் 14 பிளாட் அதில் எத்தனை விற்றார் என்றால் 9 விற்றுவிட்டார். மேற்கண்ட செட்டில்மெண்ட் போக திருமேனி நகர் பிளாட் போட்டு 35 பிளாட்டை என் அப்பா விற்றார். தாவா சொத்துக்கு அருகில் திருமேனிநகர் உள்ளது என்றால் ஆமாம். எல்லாமே அரசாங்கத்தில் அனுமதி பெற்று விற்கபட்டது என்றால் ஆமாம். அந்த மனைகளில் 20,30 அடிகளில் சாலை விடபட்டது என்றால் ஆமாம். மொத்தமாக எனது பாட்டி எவ்வளவு சொத்து வாங்கினார் என்றால் கத்தரிநத்தம் கிராமத்தில் 419/1 , 420 மற்றும் அதன் உட்பிரிவுகள் 5ஏக்கர் அதுதான் திருமேனிநகர் விரிவாக்கம் அதில்தான் எங்கள் நால்வருக்கும் பிரித்து கொடுத்தார். நான் என்ன படித்துள்ளேன் டிப்ளோமோ

மெக்கானிக் இன்ஜினியரிங். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1990. என் தகப்பனாரின் விருப்பத்திற்கு மாறாக வேறு இனப்பெண்ணை திருமணம் செய்துகொண்டு ஈரோட்டிற்கு குடியேறிவிட்டேன் என்றால் ஆமாம். 1990லிருந்து 2014 வரை ஈரோட்டில் குடியிருந்தேன் என்றால் ஆமாம். 2002 இல்தான் 1ஆம் பிரதிவாதிக்கு திருமணம் என்றால் ஆமாம். அவருடைய திருமணத்திற்குதான் என் அப்பா என்னை அழைத்தார் என்றால் இல்லை என் மாமா நல்ராமசந்திரன் அழைத்து வந்தார். 1990 முதல் 2014 வரை 25 ஆண்டு வரை என் அப்பா என்ன பிளாட் போட்டார் என்ன விற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல நான் வந்துபோனேன். நான் வந்துபோவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2010 செட்டில்மெண்ட் எழுதி எந்த தேதியில் அனுபவம் கொடுத்தார் என்றால் அன்றைக்கே கொடுத்துவிட்டார். 2002 இல் 1ஆம் பிரதிவாதி திருமணத்திற்கு வந்த நான் மீண்டும் ஈரோட்டிற்கே சென்று 2014 வரை வசித்தேன் என்றால் ஆமாம். 2023 இல் என் தந்தை இறக்கும் வரை எனது தந்தையும் தாயாரும் 1ஆம் பிரதிவாதி வீட்டில் வசித்தார்கள் என்றால் இல்லை என் வீட்டில் வசித்தார். என் மனைவி பாரதநாட்டிய வகுப்பு நடத்துகிறார் என்றால் ஆமாம். நான் தற்போது வசித்து வரும் வீட்டில் மாடிபகுதியில் நானும், தரைதளத்தில் என் தாயாரும் வசிக்கிறோம் என்றால் ஆமாம். என் தாயாருக்கும் எனக்கும் சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல. என் மனைவி பெயர் என்ன என்றால் வைதேகி. 5.11.2023 இல் என் மனைவி என் தாயாரை தரக்குறைவாக திட்டி அடித்ததால் புகார் கொடுக்கபட்டு முதல் தகவல் அறிக்கை பதியபட்டுள்ளது என்றால் அழுத்தத்தின் காரணமாக பதியபட்டுள்ளது அதில் நான் 1ஆம் குற்றவாளி என்றும் என் மனைவி 2வது குற்றவாளியாக உள்ளது என்றால் சரியல்ல. முதல்விசாரணை வாக்குமூலம் பக்கம் 5 பாரா10இல் எனது தகப்பனார் 26.5.2021 இல் இறந்ததாக சொல்லி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் வருடம் தவறு கையெழுத்து போட்டுள்ளேன். எந்த வருடம் பேரனுக்கு என் அப்பா உயில் எழுதியுள்ளார் என்றால் 2019. 2010 இல் எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கும் போது பாட்டி உயிருடன் இல்லை என்றால் ஆமாம். 2010இல் எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த காலத்தில் சொத்தின் உரிமையாளர் என்ற நிலையில் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அதே அடிப்படையில்தான் 2019 இல் தனிபட்ட உரிமையாளர் என்ற முறையில் தனது பேரன்

5ஆம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தார் என்றால் தவறு. பேரனுக்கு எனது அப்பா எழுதி வைத்த உயில் தவறு என்றால் 2010 இல் எனக்கும் , 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் எழுதி வைத்தது அப்பா எழுதி வைத்தது சரிதான். 5பிளாட்டும் பதிவு செய்யபட்ட உயில் ஆவணத்தின்படி எனது அப்பா எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். 2019இல் உயில் எழுதி வைத்ததை எந்த தேதியில் நான் தெரிந்து கொண்டேன் என்றால் என் அப்பா இறந்த அன்று தெரிந்து கொண்டேன். 8.2.2019 எழுதிவைத்த உயிலை பிராதில் என்றைக்கு தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 5ஆம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்த சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் எனது தம்பி போர்செட்டுபோட்டு பூட்டு போட்டு பூட்டி வைத்துள்ளார். யார் பெயரில் உள்ளது என்று எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2023 இல் தெரிந்துகொண்டேன். தற்போது யார் பெயரில் உள்ளது என்று எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2024 இல் தெரியும். எந்த தேதி என்றால் 25.6.2023லும், செட்டில்மெண்ட் எழுதிய இரண்டு நாளுக்கு பிறகுதெரியும். 2024 இல் எந்த தேதியில் தெரிந்து கொண்டேன் என்று வழக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். 13.6.2024இல் நகல் பெற்ற பிறகு தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். மேற்படி தகவலை பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். சதுரடி எவ்வளவு போகிறது என்றால் ரூ.1500லிருந்து 2000 வரை. நான் தாவாவில் சரியாக மதிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அனைத்து சொத்துகளுமே திருமேனியால் சொந்த வருமானத்தை வைத்து வாங்கபட்டவை என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா அரசு ஊழியராக பணியாற்றியதால் அவர் பெயரில் கிரையம் வாங்காமல் அவருடைய தாயார் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. கண்ணந்தங்குடி கிராமத்தில் என் தந்தையாருக்கு ஒரு குழி கூட இல்லையா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனது தந்தையாருக்கு பாத்தியபட்ட சொத்து என்றும் அதில் எனக்கு எழுதி கொடுத்ததுபோல் 5பிளாட்டை 5ஆம் பிரதிவாதிக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றும் அது அவருக்கு சொந்தம் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது பாட்டிக்கு பாத்தியபட்ட பூர்விக சொத்து அல்ல என்றும் என் அப்பா வாங்கிய சொத்து என்றும் அதனால் நான் தாவா சொத்தில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. அதேபோல் தாவா

சொத்துகளில் எனக்கு 1/5 பாகம் கிடைக்க அருகதையில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் பெயரில் இதுவரை எந்த சொத்தும் இல்லை என்றால் ஆமாம். நான் என் சகோதர, சகோதரிக்குமிடையே உறுதிமொழி ஆவணம் ஏற்பட்டு எனது தந்தையாருக்கு கொடுத்தோம் என்றால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. மேற்படி கையெழுத்தை கையெழுத்து நிபுணர் பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை பெற ஆட்சேபணையில்லையா என்றால் இல்லை. என் அம்மாவை நான் எந்த பராமரிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரரணை ஏற்றுகொகாள்ளபட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.